**தலைப்பு 197 - திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) அமைச்சினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்று, திறைசேரியின் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்றுடன் இணங்காமையால் ரூபா 199,083,986 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுடன் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அனைத்து கிளைகள் மற்றும் செயற்திட்டங்களுக்குரிய அனைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டு ரூபா 322,107,031.50 ஆன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் CIGAS நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட போதிலும், கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. ரூபா 123,023,045 ஆன பொறுப்புகள் மாத்திரமாகும். |

## 1.6.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | அவதானிப்புகள் பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மைகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 768,760<br><br>111,440 | • 19 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த எரிபொருள் மற்றும் நாணாவித முற்பணங்களைத் தீர்ப்பதிலான தாமதம் 01 மாதம் முதல் முதல் 04 மாதங்கள் வரையான காலவீச்சில் காணப்பட்டது.<br>• 04 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட முற்பணங்கள் உரிய பணிக்காக செலவிடப்படாது 8 முதல் 40 நாட்கள் வரையான கால வீச்சில் காசு கையிருப்பில் இருந்த பின் முழுமையாக மீளத் தீர்க்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும் என்பதுடன் பணி நிறைவு செய்யப்பட்டவுடன் முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இதன் பின்னர் பல்வேறு பணிகளுக்காக பெற்றுக்கொள்ளப்படும் முற்பணங்கள் உரிய பணி நிறைவு செய்யப்பட்டவுடன் அல்லது 14 நாட்களினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |
| (ஆ) 2010 மே 14 ஆந் திகதிய சீஎஸ்/1/17/1 ஆம் இலக்க அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கை. | 3,425,280 | • ஏற்பாடுகளை கருத்திற் கொள்ளாது அமைச்சின் 06 உத்தியோகத்தர்கள் பிரதி அமைச்சரின் பதவியணிக்கு இணைப்பு செய்யப்பட்டு 2017 யூன் மாதம் முதல் 2018 ஒக்தோபர் மாதம் வரையிலும் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 3,425,280 செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவை. | ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளுக்கமைய பதவியணி போதுமானதாக இல்லாமையால் அமைச்சின் பதவியணியின் உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 12 செலவின விடயங்களுக்கான ரூபா 75,277,800 கூட்டுத்தொகையான நிதிசெயற்பாடுகளில் ஒவ்வொரு செலவினத் தலைப்பின் கீழும் 70 சதவீதத்திற்கும் அதிகமான சதவீதமான நிதி செற்பாடு எஞ்சியிருந்தது | நிதி செயற்பாடுகளை உரிய முறையில் திட்டமிட்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்டவாறு செலவினங்கள் ஏற்படாமையால் இந்த செலவினத் தலைப்புகளின் நிதியேற்பாடுகளில் சேமிப்பொன்று இடம்பெற்றுள்ளது. |
| (ஆ) 07 செலவின விடயங்களின் கூட்டுத்தொகையான ரூபா 386,850,000 ஆரம்ப செலவின மதிப்பீடு மீளாய்வாண்டினுள் 114 சதவீதம் முதல் 353 சதவீதம் வரையான வீச்சில் திருத்தத்திற்கு உள்ளாகியிருந்தது. | நடைமுறைக்கு சாத்தியமான அடிப்படையொன்றில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியுள்ளமை. | ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகள் போதுமானதால் இல்லாதிருந்தமையால் இந்த செலவினத் தலைப்புக்களுக்கு நிதியேற்பாடுகள் மாற்றப்பட்டது. |

### 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 09 செலவின விடயங்களுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி ரூபா 1,962,722 ஆன கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தமை. | ஏற்பாடுகளுக்கமைய அங்கீகரிக்கப்பட்ட எல்லையினுள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | திறைசேரி நிதி ஏற்பாடுகள் தேவையான அளவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிராமையால் உரிய செலவினங்களுக்காக கடப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட வேண்டியமையும் இதற்கான காரணமாக அமைந்துள்ளது. |

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **பணிப்பொறுப்புகளை நிறைவேற்றாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
| --- | --- | --- |
| (அ) வருடாந்தம் பாடசாலைக் கட்டமைப்பினுள் பல்கலைக்கழக நுழைவு அல்லது முறையான தொழில்சார் பயிற்சியொன்றினையும் கிடைக்காத சுமார் 150,000 இளைய சமூகத்திற்கு பொருந்தக் கூடிய வகையில் தொழிற்பயிற்சி சந்தர்ப்பங்களுக்காக வசதிகள் ஏற்படுத்தப்பட்டிராமை.<br><br>மீளாய்வாண்டிற்குரியதாக கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வியற் கல்லூரிகள் உள்ளடங்களான 367 நிறுவனங்களின் தொழில் பயிற்சிக்காக மாணவர்களை இணைத்துக் கொள்ளல் 81,563 ஆகும். அவ்வாறே பயிற்சி நிறுவனங்களினால் நடாத்திச் செல்லப்படும் பாடநெறிகளுக்காக இணைத்துக்கொள்ளக்கூடிய ஆகக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை இணைத்துக் கொள்ள போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படவில்லை. | புதிய தொழில்சார் பயிற்சி சந்தர்ப்பங்கள் மற்றும் தேவைப்பாடுகள் இனங்காணப்பட வேண்டியமை மற்றும் அதற்காக புதிய பாடநெறிகளை ஆரம்பித்தல் மற்றும் நடாத்தப்படும் பயிற்சி நிறுவனங்களை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பாடநெறிகளுக்காக இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை இரு மடங்காக்கும் பணிக்கு (ஆகக் குறைந்தது 50 சதவீதத்தினால்) நிறுவனத்தை ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கமைய நிறுவனத் தலைவர்களால் இணைத்துக் கொள்ள தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தொழிற் சந்தைக்கு பொருத்தமான ஊழியப்படையணியொன்றை உருவாக்குதல், தொழில்நுட்ப மற்றும் கைத்தொழில் கல்வியினை புதுப்பித்தல் அமைச்சின் பணியொன்றான போதிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையின் தேவைப்பாடுகளை இனங்கண்டு அதன் அடிப்படையில் பாடநெறி பாடத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல் போன்ற பணிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளமை. | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்புகள் இனங்காணப்பட்டு அதற்கமைய பாடநெறிகளை ஆரம்பித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் உள்நாட்டு தொழில் சந்தையை இனங்கண்டு Labour Market Bulleting எனும் பெயருடைய தகவல் திரட்டொன்று அதற்கான எதிர்கால எதிர்வு கூறலொன்றும் உள்ளடக்கப்பட்டு அது தொடர்பில் நிறுவனத்திற்கு அறிவூட்டும் போது அமைச்சினால் 2019 ஆம் ஆண்டில் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் தேசிய தொழில் சார் தகைமைகளுடன் (NVQ) பாடநெறியை நடாத்துவதற்கான பயிற்சி பாடநெறிகள் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும். நிறுவனங்களால் நடாத்தப்படும் 2834 பாடநெறிகளில் 561 பாடநெறிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | பாடநெறிகளை அங்கீகரிப்பதன் மூலம் தரமான தொழிற்சார் பயிற்சியொன்றிற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | தூரப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள தொழில்சார் பயிற்சி நிறுவனங்களில் பாடநெறிகளை அங்கீகரிப்பதற்குரிய தேவைப்பாடுகள், அதாவது குறித்த பாடநெறிக்கான பயிற்றுவிப்பாளர்கள், உட்கட்டமைப்பு வசதிகள், பாடநெறிக்குரிய இயந்திர உபகரணங்கள் போன்ற தேவையான அடிப்படை வசதிகள் இல்லாதிருந்தமையின் அடிப்படையில் பாடநெறிகளை அங்கீகரிக்க முடியாதாலும், உரிய தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அங்கீகரித்தல் மேற்கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஈ) | அமைச்சின் கீழுள்ள பயிற்சி நிலையங்களில் சில பயிற்சி பாடநெறிகளுக்காக மாணவர்களின் பங்குபற்றுதலானது போதுமானதாக இல்லை | பாடநெறிகளுக்காக மாணவர்களை ஈர்த்துக்கொள்ளல் மற்றும் மாணவர்களின் ஈர்ப்பு குறைவான பாடநெறிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்கு | 2019 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடநெறிகளின் பகுப்பாய்வு நிகழ்ச்சித்திட்டம் (Rationalization) மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய 5 மாணவர்களை விட குறைவான 68 பாடநெறிகளும் 6 இற்கும் 10 இற்கும் இடைப்பட்ட மாணவர்களுடன் 29 பாடநெறிகளும், 15 மாணவர்களை விட குறைவான 142 பாடநெறிகளும் ஆகும். போதுமான வளங்கள் மற்றும் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டுள்ள போது அந்த பாடநெறிகளில் மாணவர்களை ஈடுபட வைத்தல் தொடர்பில் பிரதேச செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள திறன்கள் அபிவிருத்தி உதவி உத்தியோகத்தரின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படவில்லை. | முறையான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | மாணவர்களின் பங்குபற்றல் குறைவான பாடநெறிகள் உரிய நிறுவனத் தலைவர்களின் இனக்கப்பாட்டின் அடிப்படையில் நிறைவு செய்வதற்கும், அதிக கேள்வியுடைய பாடநெறிகளை புதிதாக ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதனூடாக மேற்படி நிலைமை எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (உ) | தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தினை அதிகரிப்பதற்கு போதியளவான கல்விசார் பதவியணியை இணைத்துக்கொள்ளல் மற்றும் போதியளவான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சின் கீழுள்ள 04 நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 81 பேராசிரியர்கள் மற்றும் 178 விரிவுரையாளர்களின் வெற்றிடங்கள் | கல்விசார் பதவியணியை பயிற்றுவித்தல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டியமை மற்றும் தேவையான பணிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம் தொழில்சார் பயிற்சியினை பெறும் மாணவர்களுக்கு முறையான மற்றும் தரமான பயிற்சியொன்றினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கான ஆட்சேர்த்தல்கள் மேற்கொள்ளப்படுவது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெறுவதன் மூலமாகும். அதற்கமைய வெற்றிடங்களை நிரப்புவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்த பின் உரிய நிறுவனங்களால் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | எடுக்கப்படும். |

**3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்**

---------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) பாதீட்டு முன்மொழியொன்றின் அடிப்படையில் மாவட்டத்தில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த தேசிய தொழிற் பயிற்சி நிறுவனத்திற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 200 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சரவை பிரமாணக் குறிப்பொன்றினூடாக அந்த செயற்திட்டம் கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் விடுதியொன்றினை நிர்மாணிப்பதற்காக மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், புதிய செயற்திட்டம் கணக்காய்வு திகதியான 2019 மே 08 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை உரிய முறையில் திட்டமிடல் மற்றும் துரிதமாக நிறைவேற்றுவதனூடாக நிதியை செயல்திறனாக ஈடுபடுத்துவதற்கும், தொழிற்பயிற்சி துறையின் அபிவிருத்தி உயர்வான பங்களிப்பொன்றை வழங்க வேண்டியுள்ளமை. | கிளிநொச்சி, இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் விடுதியை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தினை கையளிப்பதற்கான கேள்வி கோரப்பட்ட பின்னர் மதிப்பாய்வுக் குழுவினால் விலைக்கேள்வி மதிப்பீடு செய்யும் பணிகள் (Bid Evaluation) இடம் பெற்றவாறு உள்ளது. |
| (ஆ)இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் கற்றல் திறனான மேம்படுத்தும் செயற்திட்டம் (KOICA) 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட போதிலும், அதற்கு பொருத்தமான காணியொன்றை அங்கீகரிக்க | திட்டமிடப்பட்ட செயற்திட்டத்திறனான தாமதமின்றி நிறைவு செய்தல் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள வேண்டியமை. | 2017 ஆம் ஆண்டு முதல் பொருத்தமான காணிகள் முன்மொழியப்பட்டு சுவீகரித்தல் இடம் பெற்ற போதிலும், ஏற்பட்ட பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாகவும், காணிகளின் சுற்றாடல் அறிக்கைகள் திருப்திகரமான நிலையில் காணப்படவில்லை. இது வரையில் தேசிய நீர் வளங்கல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவாகம் |

| | | |
|---|---|---|
| முடியாதிருந்தது. | | (NARA) அமைந்துள்ள காணியில் ஒரு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

### 3.3 ஏனைய அவதானிப்புகள்

### 3.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணைக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>பரிந்துரைகள்</u> | <u>பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u> |
|---|---|---|
| சேவை நிறைவு செய்து 05 வருடங்களை விஞ்சியிருந்த உத்தியோகத்தர்கள் மூவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 415,750 தொகையான கடன் மீதியில் கணக்காய்வு திகதியான 2019 ஏப்ரல் 08 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | மேற்படி விடயம் தொடர்பிலான அனைத்து ஆவணங்களும் அரச கணக்காய்வு பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>பரிந்துரைகள்</u> | <u>பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u> |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சிரேஷ்ட மட்டத்திலான 9 பதவிகள் உள்ளடங்கலான 82 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. | அமைச்சின் பணிகளை செயற்திறனாக நடாத்திச் செல்வதற்கு தேவையான பதவியணியை பேண வேண்டும். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |